சந்தாதாரரின் கவனத்திற்கு :
காவலன்
வருட சந்தா ரூபா 9-00
6 மாத ,, ,, 4-50
3 மாத ,, ,, 2-25
(தபாற் செலவு உட்பட)

# காவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
செய்தித்தாளாகப் பதிவுபெற்றது.

மரணத்தின் இளைய தம்பி உறக்கமாயிருக்கிறது. உறக்கம் என்பது சிறியமரணமாகும்.
— ஓர் அறிஞர்

94-ம் புத். | 1969-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 20-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 36-ம் இல.

# உலக ஆயர் பேரவையின் கூட்டம்

எதிர்வரும் ஐப்பசித்திங்கள் 11-ந் தேதிதொடக்கம் இருவாரகாலமாக வத்திக்கானில் நடைபெற இருக்கும் உலகஆயர் பேரவை மகாநாட்டுக்குத்துரிதமாக ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. தேசீய மேற்றிராணிமார்களுக்கும், வத்திக்கானுக்குமிடையில் உகந்த தொடர்பு ஏற்படுத்திக்கொள்வதே இம்மகாநாட்டின் முக்கியநோக்கம். உலகின் பலபாகங்களிலும் (இலங்கை உட்பட) தேசீய சினொட்சபைகளின் கூட்டங்கள் நடைபெற்றன. பிரதேச மேற்றிராணிமார்கள் தத்தம்பகுதிகளில் உள்ளதேவைகளை நன்குஅறிந்துகொண்டார்கள். அவற்றை வத்திக்கானுக்கு அறிவித்து அவை பற்றிப் பொதுமுடிவுகள் செய்யப்படும். மகாநாட்டின் நிகழ்ச்சிநிரலில் உள்ள கருமங்கள் திருச்சபையின் ஆட்சிமுறையில் ஆயர்மாருக்கு முன்னிலும் கூடிய பொறுப்புக்கள் திருச்சபையின் நன்மைக்காகக் கேட்டுநிற்கின்றன. தற்போது இக்கருமங்கள் "கியூறியா"வினாலும் பாப்பரசரினாலும் கவனிக்கப்பட்டுவருகின்றன.

## இளைஞர் சங்க மகாநாடு

இம்மாதம் 9ஆம், 10ஆம் திகதிகளில் இத்தேசக் கத்தோலிக்க இளைஞர்சங்க ஞானலோசகர் மகாநாடு கொழும்பில் அதிமேற்றிராணியார் இல்லத்தில் நடைபெற்றது. பல மேற்றிராசனங்களிலுமிருந்து குருமார், பிறதர்மார், கன்னியாஸ்திரிமார் சுமார் 70 பேர் இம்மகாநாட்டில் கலந்துகொண்டனர். இக்காலத்தில் இளைஞர் இயக்கங்கள் உலகில் பல இடங்களிலும் அரும்பெரும் செயல்களைச் செய்துவரும் நாட்களில் இந்நாட்டிலும் அவர்களுடைய சக்தியை நல்வழிகளில் செலுத்த நாம் தயாராயிருக்க வேண்டுமென்பதே இம்மகாநாட்டின் நோக்கம். ஆலோசனைகளின்போது, இளைஞர் மத்தியில் ஞானலோசகர் முன்னிலும் கூடிய முறையில் காணப்பட வேண்டுமெனவும், இளைஞரின் பிரச்சினைகளில் நல்ல ஆலோசனை கூற ஆலோசகர்களுக்கும் கத்தோலிக்க மேலதிகாரிகளுக்குமிடையில் இலகுவான தொடர்பு ஏற்பட வேண்டுமெனவும் எடுத்துக் காட்டப்பட்டது.

## கருதினால் சுயெனஸ் கூறுவதற்கு எதிர்ப்பு

பெல்ஜியதேச கருதினால் சுயெனஸ் அடிகளார் முற்போக்குத் தன்மை உடையவர். அவர் திருச்சபையில் எங்கெங்கே குறைபாடுகள் உண்டோ அவற்றையெல்லாம் சுட்டிக்காட்டித் திருத்தி அமைக்க வேண்டிய வகைகளையும் கூறிவருகின்றார். திருச்சபையைப் பாப்பரசர் ஆளும் வேலையில் அவருக்கு உதவி செய்துவரும் "கியூறியா" சபைகளில் திருத்தி அமைக்கக்கூடிய பலவகைகளையும் அவர் எடுத்துக் காட்டியிருக்கிறார். இவ்வகையில் அவர் பகிரங்கமாகக் கூறிவருவது தகாதெனக் கருதுபவரும் பலர் உளர். அவர்களுள் கருதினால் டானியெலோ ஒருவர். இவ்வருடம் ஐப்பசிமாதம் நடக்க இருக்கும் உலக மேற்றிராணிமார் சினொட் சபையில் இவ்விஷயங்களை விவாதித்து முடிவுசெய்வதே தக்க முறையெனவும், அதற்கு முன் பத்திரிகைகள் மூலம் குறைகளை வெளிப்படுத்துவது முறையல்லவெனவும் அவர் கூறியிருக்கிறார்.

# யப்பானுக்கு மறுவருடம் பாப்பரசர் செல்வாரா?

வருகிற வருடம் யப்பானில் நடக்க இருக்கும் "எக்ஸ்போ—70" என்னும் விழாவில் பங்குபெற்றுக் கொள்ளுமாறு பரிசுத்த தந்தைக்கு வரவழைப்புக் கிடைத்திருப்பது உண்மையே. ஆனால், சமயத்துடன் அல்லது மக்களின் ஒழுக்கமுறையுடன் சம்பந்தப்பட்ட வைபவங்களுக்குத்தான் அவர் இதுகாலவரையும் சென்றிருக்கிறார். ஆகவே இவ்வரவழைப்பை ஏற்று அங்கு செல்வது சாத்தியமாகத் தோற்றவில்லை. எனினும் சமாதான சம்பந்தமுடைய இரு சம்பவங்கள் யப்பானில் மறுவருடம் நடக்க இருக்கின்றன. ஹிரொஷீமாவில் அணுக்குண்டு வீசப்பட்ட 25-ம் வருட நிறைவு ஒன்று. மற்றொன்று உலக சமாதான இயக்கமகாநாடு. ஆனால் இவற்றில் ஒன்றுக்கும் இன்னும் பரிசுத்த தந்தைக்கு வரவழைப்புக் கிடைக்கவில்லை. எனினும் பாப்பரசர் வருகிறவருடம் யப்பானுக்குப் போகக்கூடும் என்று வதந்திகள் வத்திக்கானில் உலாவுகின்றன.

## திரு. கலகன் வட அயர்லாந்தில் அமைதி வருவிக்கின்றார்

சென்ற பல மாதங்களாக வடஅயர்லாந்தில் கத்தோலிக்கருக்கும், புரொட்டஸ்தாந்தருக்குமிடையில் கலகங்கள் நடந்து வந்தது யாவரும் அறிந்த விஷயமே. இங்கே அமைதியை நிலைநாட்ட இங்கிலாந்து அரசாங்கத்துக்குக் கடமையுண்டு. அயர்லாந்தின் வடபாகமாகிய அல்ஸ்ரர் மாகாணம் ஆங்கில நாட்டின் ஒருவகை ஆதிக்கத்தில் இருந்து வருவதே இக்காரணம். ஆகவே, ஆங்கில நாட்டு உள்நாட்டு மந்திரி தம்மாலான பிரயாசைகள் எல்லாம் செய்து சென்ற வாரம் அப்பகுதியில் ஓரளவு அமைதியை நிலவச் செய்திருக்கின்றார். அப்பகுதிகளை அவர் அண்மையில் நேரிலே சென்று பார்வையிட்டார். அத்தருணம் கத்தோலிக்கரும், புரொட்டஸ்தாந்தினரும் அவருக்கு நல்வரவேற்பு அளித்தது நல்ல ஓர் அறிகுறியாகும்.

# இறைவனைப் பணியும் இயற்கை

அகில உலகையே ஒன்றுமில்லாமையிலிருந்து படைத்த கடவுள் அவற்றின் அழகை வியந்து இன்புற்றாரென்றால் நாம் எப்படிச் சும்மாவிருப்பது? வானம்! வர்ணப்பறவைகள். ஆகாயப்பறவைகளைப் பாருங்கள், அவைகள் விதைப்பதுமில்லை அறுப்பதுமில்லை ஆயினும் உங்கள் பிதா அவற்றிற்கு உணவூட்டுகிறார். நீங்கள் அவற்றைவிட மேலானவர்கள். வயல்வெளிகளிலுள்ள லீலிப் புஷ்பங்களைப் பாருங்கள், அவை எவ்வளவு அழகாயிருக்கின்றன. ஆம் இயற்கையின் அழகே அழகு!

கடல், மலை, ஆறு, மரம் செடி, மிருகங்கள், தென்றல் இவற்றின் மத்தியில்தான் மக்கள் வாழ்வு ஓடிக்கொண்டிருக்கிறது. மனுமகன் மலையிலேதான் மறுரூபமானார், போதனை செய்தார், கடைசியில் மலையில்தான் மரணித்தார். கடலிலே படகில் இருந்தபடி போதித்தார், பிரயாணம் செய்தார். அற்புதமாய் மீன்கள் பிடிபடச் செய்தார். கடலின்மேல் நடந்தார்— புயலையடக்கினார். இறைவனுக்கு இயற்கைமீது அதிகாரம் உண்டென்பதை இவற்றால் அத்தாட்சிப்படுத்தினார். தெய்வத்தன்மை அனைவர்க்கும் வெளியானது. அவர் தேவன் என்பதை தெட்டத்தெளிவாய் அனைவரும் கண்டுபிடித்தனர். போதனை செய்யுமிடங்களாக மலை, கடல், ஆறு என்பவற்றையே தெரிந்துகொண்டார். இத்தகைய இடங்களில்தான் மனிதநடமாட்டம் அதிகமிருந்தது, பசி, களை என்பது தோன்றுவதும் குறைவு. இயற்கையையே இறைவன் தெரிந்துகொண்டார்.

மரங்களில் கனிபறித்தல், பயிரிடுதல் என்பவற்றைக் கூறிப் புரியாத பல விடயங்களைப் புரியவைத்தார் புவியிலே. விதை விதைக்கும் காட்சிகொண்டு தேவவாக்குக் கேட்கும் விதம் பற்றிக் கூறினார். இப்படியே தாம் படைத்த இயற்கை இன்பத்தைக்காட்டி இறை வாழ்வை இலங்கச் செய்தார்.

நாமும் எமது வாழ்விலே இத்தகைய இடங்களைச் சந்திக்க நேரிடுகிறது. பொழுதுபோக்கிற்காய் இவ்விடங்களை பயன்படுத்துகிறோம். இன்பத்தையனுபவிக்கிறோம். இயற்கை இறைவன் படைப்பென்பதை மறந்துவிடுகிறோம். பரந்துவிரிந்த கடலிலே பரமனது பரந்த நோக்கையும் விரிந்த மனப்பான்மையையும் காணலாம். உயர்ந்த மலை உத்தமர் பண்பைக் காட்டி நிற்கிறது! இப்படியே இயற்கையெல்லாம் இறைவன் கைத்திறனைக் காட்டி நிற்கின்றன. நாமோ அவற்றின் அழகை ரசித்து ஆண்டவனை மறக்கிறோம். பாடும் பறவைகள் பண்ணிசைத்துப் பாடித் துதிக்கின்றன. ஓடும் நதியும ஓசை எழுப்பித் துதிசெய்கிறது. மெல்லெலன வீசும் தென்றலும் மேன்மையுடன் துதிசெய்கிறது. மரம், செடிகள் மணம் நிறைந்த மலர்களைப் புட்பித்து மாபரனை மகிழ்விக்கின்றன. மிருகங்கள் குரலெழுப்பி துதி செய்கின்றன. ஆறறிவுபடைத்த மானிடராகிய நாம் மட்டும் இதற்கு விதிவிலக்கா? தொழுவோம் பணிவோம் வாருங்கள் இறைவனை.

ஆம் ஆண்டவரே இதுவரையும் நீர் எமக்களித்த இயற்கையின் மூலம் இன்பத்தையும் ஏன் எத்தனையோ நன்மைகளையும் அனுபவித்தோம். ஆனால், உம்மை மறந்து உமது உன்னத நோக்கங்களை அறியாது அறியாமையிலே திளைத்திருந்தோம். இனி இயற்கையை நோக்கும் ஒவ்வொரு முறையும் உம்மையே உணர்ந்து உமது புகழைப்பாடி என்றும் உம்மை ஆராதிக்க உமது அருளைத் தந்தருளும்.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் பெண்களின் அப்போஸ்தல சீவியம்

(இமெல்டா பிலிப்புப்பிள்ளை — சில்லாலை)

திருச்சபையில் மறுமலர்ச்சிகள் தோன்றும் இக்காலத்தில் விசுவாசிகள்தான் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை வகிக்க வேண்டுமெனத் திருச்சபை விரும்புகிறது. ஏனெனில் ஞானஸ்நானத்தின் வழியாக தேவனின் பிள்ளைகளாகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு கிறீஸ்தவனும், கிறீஸ்தவளும் தேவனின் திராட்சைத் தோட்டத்தில் பணிபுரிய அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பணியில் உறுதுணை புரிந்து ஊக்குவித்து வழிநடத்துவதற்காகவே குருக்கள் மற்றும் மறைஆயர்கள் அனைவரும் இருக்கின்றார்கள்.

நாம் இன்றைய திருச்சபையில் பெண்கள் அந்தஸ்து எப்பேர்ப்பட்டது என்றும் அதில் நம் ஒவ்வொருவரினது கடன் என்னவென்றும் உணரவேண்டியது அவசியம். யேசுநாதர் தமது சீவியகாலத்தில் பெண்களை அதிகமாக நேசித்திருக்கிறார். புனித கன்னிமரியாளைத் தமது மாதாவாகத் தெரிந்தெடுத்தார். புனித மரியமதலேனாளை அப்போஸ்தலர்களுள் அப்போஸ்தலராக ஆக்கினர். அப்போஸ்தலர் முதலாய் ஒடி ஒளித்திருக்க புனித வெரோணிக்காள் யேசுநாதருடைய திருமுகத்தைத்துடைக்க முன் வருகின்றாள். சிலுவையின் பாதையில் பெண்கள்தான் அவருக்கு ஆறுதலளிக்க அவர் பின்னே கண்ணீர் சிந்திக்கொண்டு சென்றார்கள்.

இருபதாம் நூற்றாண்டிலே சீவிக்கும பெண்களாகிய எம்மையும் யேசு நேசிக்கிறார். நாமும் அவரை நேசிக்கிறோமா? எப்படி? முழு இருதயத்தோடும் முழுப்பலத்தோடும் முழுத் தத்துவங்களோடும் நேசிக்கிறோமா? செயலிலே அந்த அன்பைக் காட்டுகின்றோமா? அல்லது கோழைகளாகப் பின்னிட்டுப் போகிறோமா என ஆராய்வோம்.

நாம் ஒவ்வொருவரும் அவரை நேசிக்க ஆசிக்கின்றோம் என்பது மெய்தான். ஆனல் உலகம், சரீரம், பசாசு என்னும் சத்துருக்களால் அலைக்கழிக்கப்படும் சமுதாயத்தில் வாழ்ந்துவரும் நாம்எப்படி தீயவலைகளில் நின்று எம்மையே காத்து அவருக்கு உகந்த பணி புரியலாமெனச் சிந்திப்போம்.

ஒவ்வொரு பெண்ணும் ஓர் ஒளிவிளக்காக மிளிரவேண்டும். அந்த ஒளியை எங்கேயிருந்து பெறவேண்டும். ஞானச் சூரியனை கிறீஸ்துநாதர்தான் அந்த மெய்யான ஒளி. அடிக்கடி நற்கருணைவிருந்தில் பங்கு பெறுவதின்மூலம் அந்தஒளி நாளுக்குநாள் அதிகரிக்கவேண்டும். அப்போதுதான் கிறீஸ்துவை எம்மில் பிரதிபலிக்கச் செய்வோம். திராட்சைச்செடியினின்றும் வெட்டப்பட்ட கிளையானது கனிகளைக் கொடுக்க முடியாது. அதேபோல் கிறீஸ்துவோடு ஒன்றித்திராத ஆன்மா பரலோக பாதையில் செல்வதற்கேற்ற நன்மைஎதுவும் செய்யமுடியாது.

"ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்." பசாசின் பேச்சை நம்பிய ஆதித்தாய் ஏவாள் அழிவுக்கு வித்திட்டாள். தேவனின் சித்தத்தைச் சிரமேற் கொண்டதனல் மரியாள் இரட்சணியத்தின் வித்தை விதைத்தாள். மரியாளுக்கும் கிறீஸ்துவுக்குமிடையில் எவ்வித ஒன்றிப்பு இருந்ததோ அதேபோல கிறீஸ்துவுக்கும் ஒவ்வொரு கிறீஸ்தவப் பெண்ணிற்கும் ஒன்றிப்பு இருக்க வேண்டும்.

இப்படிக் கிறீஸ்தவவாழ்வு வாழும் ஒருபெண் சேவைசெய்தற்கென நேரம்ஒதுக்கி வைக்க வேண்டியதில்லை நாளாந்தசீவியத்தில் அவள் ஆற்றும் செயல்களனைத்தும் அவாது அன்பினல் தூண்டப்பட்டுச் செய்வதால் தேவனின் சேவையாக மாறிவிடுகின்றன. கன்னிமரியாள் போற்றுதற்குரிய வீரதீரச் செயல்கள் புரிந்ததாக நாம் காணவில்லை. நாளாந்த சிலுவையைச் சுமந்து யேசுவோடு உடனிரட்சகியானாள்.

ஆகவே ஓர் இளம்பெண் கோவிலிலும், வீட்டிலும், அலுவலகத்திலும், அல்லது பாடசாலையிலும் எப்படி நடந்துகொள்ள வேண்டுமெனப்பார்ப்போம். கோவிலில் மரியாதையாக உடையணிந்து செல்லவேண்டும். ஆராதனைகளுக்கு நேரத்துடன் சமுகமளித்துச் செபங்களை ஒரேகுரலாக ஒருமித்துச் செபிக்கவேண்டும். பாட்டுக்களும் அப்படியே ஒருமித்துப் பாடவேண்டும். சினிமாப்பாட்டுக்களை எவரும் பழக்கிக் கொடுப்பதில்லை. காதில பட்டவுடன் வாயில் வந்துவிகிறது. கோவிற் பாட்டுக்கள் மட்டும் வாயில்வரப் பின்னிடுகிறது. பொன்னான வாயைத்திறந்து குரலைவிட்டு அவரை மகிமைப்படுத்தத் தயங்குகிறார்கள் என்பது துயரப்படத்தக்க விஷயம். பொதுச்செபங்களை, பாட்டுக்களைச் செபிக்கும்போது அல்லது பாடும்போது பக்கத்திலிருப்போரையும் அருட்டிவிடுவது போலிருக்கும். ஆனல், பக்கலில் இருப்பவர்கள் வாயை மூடிக்கொண்டு கையைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பார்ப்பது போலிருந்தால் வாயைத் திறந்து சொல்பவளும் வாயை மூடவேண்டியது போலிருக்கும்.

சேர்முகப் பரீட்சைக்குத் தோற்றமளிக்கவிருக்கும்மாணவிகள் எப்படித்தங்களை ஆயத்தப் படுத்துவார்கள்? பலவிஷயங்களையும் அலசிஆராய்ந்து என்ன கேள்வி கேட்டாலும் பதிலளிக்கக்கூடிய விதத்தில் சிந்தனைகளை வேறுகாரியங்களில் செலவிடாது ஒரேநோக்கமாயிருப்பாள். தனக்குப் பாட்டுவன்மை யில்லாவிட்டாலும் ஒரு பாட்டையென்றாலும் திறமாய்ப் பாடப் பயிற்சி எடுத்துக் கூடியபுள்ளியை எடுக்க முயற்சிப்பாள். ஆனல் கோவிலில் பாடக்கூடியவர்கள் முதலாய் வாயைமூடி வைத்துக்கொண்டிருப்பார்கள். தேவன் தமதுவரங்களைப் பொழிவதற்கு எம்மேல் விழிவைத்தபடியிருக்க நாம் வாளாவிருக்கலாமா? இனி இந்தநிலை மாறவேண்டும். எல்லோரும் ஒருமித்துச் செபிக்க, பாடவும்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# தம்பிக்காக....!

— சி. எ. செல்வராசா

லீவுக்கு வீட்டை வாறது ஏன்? நெடுக கொழும்பில் இருந்து, கொழும்பைப் பார்த்துப்பார்த்து சலித்துப்போச்சு. ஒரு மாதம ஊரிலைபோய் நிண்டால் லீவுமாகுது, ஓய்வுமாகுது, ஒரு மாற்றமும் ஆகுது எண்டுதானே ஊருக்குவாறது. என்னதான் இருந்தாலும் என்ரை ஊர்மாதிரி வருமே? நான் தவழ்ந்த அந்தவிறுந்தை, பிஞ்சுக்கால்களால் நான நடைபயின்ற இடம், அம்மா அம்மியிலிருந்து அரைக்க நான் அவவின் முதுகில் இருந்து கொண்டு ஆடிய இடம், நானும் பக்கத்து வீட்டு ராணியும் 'அப்பா — அம்மா' விளையாடிய இடம்—கோடி, நானும் அப்புவும் இருந்துசாப்பிட்ட தோட்டத்து ஆடுகால், நான் சாணகம் அள்ளி கூட்டிய மாட்டுக் கட்டை, அப்பு பொயிலை உணத்திற பனங்காணி, ஆட்டுக்கு குழை வெட்டப் போய் சின்னாச்சியோடை சண்டை போடுற வளவு, ராசனும் நானும் குண்டடிக்கிற குஞ்சாச்சி வீட்டு முத்தம், கணக்குச் சொல்லித்தரும் பக்கத்து வீட்டு லில்லி அக்கா தரும் குட்டு—இந்த இடங்களை நேரிலை பார்த்து, கடந்தகால இப்பசுமையான நினைவுகளில் திளைக்கும்போது இதயத்தில் பிஞ்சுக் கரத்தால் தடவுவது போன்ற அமைதி — இன்பம்.

அம்மாவின் கையாலை முட்டைப் பொரியலோடை எண்டாலும் ஒரு பிடி சோறு மனமாய்ச் சாப்பிட்டால் சோறு உடலெல்லாம் சென்றுவிட்டதுபோன்ற உற்சாகம்! இதற்காக ஆயிரம் பொய்யைச் சொல்லி வீட்டை ஓடிவந்தால் ... ...ஒவ்வொரு லீவுக்கும் வரும் போது வீட்டிலை ஒவ்வொரு பிரச்சனை. குளிக்கப் போய்ச் சேறு பூசியாற மாதிரி, நின்மதிக்காக வீட்டைபோய் ஏதாவது கவலையோடை திரும்பிக் கொடியாமத்திலை 'யாழ்தேவி' பிடிக்கவேண்டிய நிலை.

வீட்டை போட்டு அயலட்டையுக்கை, முன்பின் உதவின துகளின்ரை வீட்டை போகாட்டில் என்ன சொல்லுங்கள் ... "பார் ... சின்ன வயதிலை எங்களோடை அண்டியிருந்து திண்டு குடிச்சு வளந்தது பதினெண்டு போட்டவுடனை எங்களைக் கவனியாதாம்" எண்டு நொட்டை நொடுக்குகள் சொல்லுங்கள் எண்டதுக்காக சித்தாத்தை பெரியாத்தை விடுகளுக்குப் போயிட்டு வருவன். இப்ப சின்னம்மா வீட்டை போயிட்டு வாறன். வீட்டுப் பிரச்சனைதான் என்முன் நிழலாடுகிறது.

என்ரைசம்பளம்தான் உருப்படியாய் வீட்டை போய்ச் சேரும். என் தம்பியாகப்பட்டவன் சுன்னாகத்திலை உத்தியோகம். மாத வரும்படியும் வீட்டுச் செலவும் சரி. மிச்சம் கிடையாது. இப்ப அக்காவுக்கு இருபத்தைஞ்சு வயசாச்சு. இன்னும் அவவுக்கு கால்கட்டோ விழவில்லை. அம்மானுக்கு ஒரு பொடியன் உத்தியோககாரனுக இருக்கிறான். அவனுக்கு அக்காவைக் குடுத்திட்டு, என் தம்பி [illegible] துச்சம்மந்தம் செய்வம் எண்டு அப்புவும் அம்மானும் வெகு காலமாய் திட்டம்போட்டிருந்தவை.

என் தம்பி படிக்கும்போது அவன் தன்னைக் கைவிடான் எண்ட நம்பிக்கையிலை அவன்ரை படிப்புக்கும் கொஞ்சம் செலவு செய்தார் அம்மான். அப்பு பாத்தார், நாள் போகுதெண்டு அம்மானைக் கரச்சல் பண்ணி, அக்காவுக்கும் செல்வநாயகத்துக்கும் கலியாணத்தை முடிச்சுப் போட்டார். இன்னும் இரண்டொரு வரியத்தாலை தம்பியை செல்வநாயகத்தின் தங்கை சரசுவுக்கு செய்வம் எண்டு திட்டம்போட்டிருந்தினம்.

என் தம்பியாண்டான்செய்த திருவிளையாடல் எனக்குத் தெரியாது. நான் கொழும்பாலை வந்தண்டு படலையைத் திறக்க, "மாமி ... பாலுக்குப் பொடியன் வந்திருக்கு ..." (புதிய குரல்!) அக்காவுடைய தல்ல. அம்மான்ரை பொட்டையாக்கும் ... அட ... சரசுவின்ரை குரல் இப்பிடி மாறியிருக்கே! நான் ஆடிக்கொருக்கால், அமாவாசைக்கொருக்கால் வீட்டை வாறனன். அவளின்ரை குரல் மாறாமலே இருக்கும்? மேலும், தம்பியாண்டானுடன் அறையுக்கை கதைச்சுக் கேட்டுது. நான் சரசு எண்டு நினைத்துவிட்டு, சூட்கேசை முத்தத்திலை வைச்சுப்போட்டு அடுப்படியிக்கை போனன்.

என்னைக் கேளாமல் இறைச்சிச் சட்டியை உறியாலை ஆரடா இறக்கச்சொன்னது எண்டு அம்மா என்மீது வீசிய அதே ஊதுகுழலால் அடுப்பூதிக்கொண்டிருந்தாள்.

இளமை விளையாட்டை நினைத்துச் சிரித்தேன். திரும்பிப்பார்த்த அம்மா ஆச்சரியப் பட்டுப்போனா. "என்னடா மோனை திடீரெண்டு வந்திட்டாய்!" பல்லெல்லாம் தெரிய திருவலையை எடுத்துப் போட்டா. "இதிலை இரடா மேனை ... இதைத் தின்" எண்டு ஒரு இடியப்பத்துக்கை தேங்காப் பூவையும் சீனியையும் போட்டுத் தந்தா. நான் அதை வாங்கித் திண்டன். என்னைக்கண்ட மகிழ்ச்சியில் அம்மாவுக்கு கை கால ஓடவில்லையோ ... ...? தேத்தண்ணி ஊத்துறன்எண்டு பத்துநிமிடமாக ஏதோசெய்து கொண்டிருந்தா. தேயிலையை கோப்பையுக்கை போடுறு ... சுடுதண்ணியை மூக்குப்பேணியுக்கை விடுகிறு ... சீனியை சாயத்துக்கை விடுகிறு ... ...

எனக்கு விஷயம் புரிஞ்சு போச்சு. அம்மா தடுமாறுகிறு ... எதையோ சொல்லப் பயப்படுகிறு ... எப்படித் துவங்குவது என்று தவிக்கிறு. சிறிது நேரம் மவுனமாய்க் கழிகிறது.

"மாமி! இதாற்றை சூட்கேஸ் முத்தத்திலை கிடக்கு?"

"என்னணை, சரசு இவ்வளவு மாறிவிட்டாள்" எண்டன். அம்மா அழத் தொடங்கி விட்டா. "எனணை ... ஏனெணை ... அம்மா ... அம்மா ...

அம்மாவுக்குத் தெரியும்; தான் அழுதுபோட்டு எதைச் சொன்னாலும்நான் பொறுமையாகக் கேட்பன்...அவ சொல்லுகிறபடி நடப்பனெண்டு' அம்மா மூக்கைச் சிந்திக்கொண்டு சொன்னு ... "நீ ஒரு முற்கோவக்காறன ... நான் சொல்லுறதைக் கேட்டு ஆத்திரப்படக்கூடாது ... ஒரு சத்தம் சந்தடியும் இந்த வீட்டிலை கேட்கக்கூடாது ..."

"சரியெணை; சொல்லு."

தம்பி சுன்னாகத்திலை வேலை பாக்கும்போது ஒரு பெட்டையும் அவனோடை வேலைசெய்ததாம். இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் விரும்பிச்சினமாம். அவளைத்தான் கட்டுவன் எண்டு ஒத்தைக் காலிலை நிண்டான். இதை அறிஞ்சவுடனை கொம்மான் அட்டட்டாரே எண்டு துள்ளிக்குதிச்சார். சரசுவும் ஊணுறக்கமில்லாமல் கிடந்தாள். மச்சாளும் வேலியிக்கை புறுபுறுத்தபடி. பின்னை, கொம்மான் ஒருநாள் குடிச்சுப்போட்டுவந்து, அவன் கந்தோராலை வரும்போது மோட்டச்சயிக்கிலை மறிச்சு, கண்டபடி பேசி, ஒருக்கால் அடிச்சும்போட்டாராம்.

அவனுக்கு மனசாரக் கோவம் வருமதானே. அப்பவே மோட்டச்சயிக்கிலிலை சுன்னாகத்துக்குப் போய், அவளை மோட்டச் சயிக்கிளிலேயே கூட்டிக்கொண்டுவந்திட்டான். இப்ப இரண்டும் நல்ல சந்தோஷமாக இருக்குதுகள். அவன்ரை மனதை ஏன் குளப்புவான் எண்டு நாலு மாதமாய் உனக்கும் அறிவிக்கவேண்டாமெண்டு கொப்பர் சொல்லிப்போட்டார்.

விடிஞ்சாப்போலை பாரன்; பெட்டை தக்காளிப் பழம் போலை. குணமும் தங்கம். அவளை எனக்கும் பிடிச்சுப் போச்சு என்று.

நான்வந்தது அறிஞ்சவுடனை அம்மான் கூப்பிட்டார் "மூத்தவா...டே மூத்தவா ... இஞ்சை வாடா வேலியிலை ஒரு கதை ..."

"வாறனம்மான்" எழுந்து வேலியண்டை போனன்.


டேய் மூத்தவா! கொப்பர் மாடு வாங்க, மண்ணுங்கட்டி வாங்க எண்டு வன்னி கரைச்சு வழியை போய் கிடக்க, உங்களை நான் உக்கலையிலை வைச்சுக்கொண்டு உந்த தோட்டந்துரவெல்லாம் நடந்து திரிஞ்சனன். என்னை கைவிடாதுகள் எண்டு நான் தின்னுட்டிலும் குடியாட்டிலும் நீங்கள் நல்லாத் தின்னவேணும் குடிக்கவேணுமெண்டு உன்ரை மாமியோடை எத்தினைநாள் சண்டை பிடிச்சிருப்பன் ...

செல்வநாயகத்தை கொக்காளுக்கு கட்டும்போது கொப்பர் சொன்னவர் உன்ரை தம்பியை என்ரை சரசுவுக்கு செய்வம் எண்டு. நான் அதை நம்பி செல்வநாயகத்துக்கு கொக்காளைச் செய்தனன் ...

இப்ப ... என்ரை பிள்ளை உன்ரை பிள்ளை எண்டு வித்தியாசம் பாராமல் நான் வளத்ததுக்கு உன்ரை தம்பி செய்த கெட்டித்தனத்தைப் பாத்தியே...நன்றி கெட்ட மூதேசி! ... உதுக்கு நான் செய்ததை தெருவிலை போற பொட்டை நாய்க்கு செய்தாலும் அது என்னைக் கண்டதும் வாலை ஆட்டும். இந்தக் குமரை வீட்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்புள்ள தம்பி - தங்கையரே, வணக்கம்!

நீங்கள் ஏழை, நொண்டி, கூன், குருடு செவிடு, ஊமை, பைத்தியம் பிடித்து அலேபவர் ஆகியவர்களைக் கண்டால் எப்படி நடந்துகொள்கிறீர்கள்? அவர்களைப் பார்த்துக் கிண்டலும், கேலியும் செய்கிறீர்களா? அவர்கள்மேல் கற்களை வீசி, நாய்களை விரட்டித் துன்பப்படுத்துகிறீர்களா? அப்படிச் செய்யாதீர்கள். இப்படிப்பட்டவர்களைக் காணும்போது நீங்கள் ஒவ்வொருவரும் இவர்களில் ஒருவராய் இருக்க நேர்ந்தால் உங்களுக்கு எப்படியிருக்கும் என்று சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். அங்கவீனர்களையும், புத்தி சுயாதீனமற்றவர்களையும் கண்டால் அவர்கள் மேல் இரக்கப்படுங்கள். அவர்களுக்கு உதவிசெய்யுங்கள். யேசுநாதர் கடைசிநாளில் எமக்குச் சம்பாவனை அளிக்கும்போது, "நான் பசியாய் இருந்தேன், எனக்குப் போசனம் தந்தீர்கள்; நான் தாகமாயிருந்தேன், பானந் தந்தீர்கள்" என்று கூறி, இந்த ஏழை எளியவர்கள் முதலியோருக்குச் செய்த உதவிகளையும், உபகாரங்களையும் தமக்கே செய்ததாகப் பாராட்டுவார். எனவே, உங்களைப்போன்ற சிறுவர்களுக்கு, குறைபாடுள்ள சிறுவருக்கு உதவிசெய்யுங்கள். பரமண்டலங்களில் இருக்கிற எமது பரமபிதா இவைகளுக்குச் சம்பாவனை அளிப்பார். நீங்கள் ஒருவித உடற்குறைபாடும் இல்லாது, எல்லா வசதிகளையும் பெற்றிருப்பதற்குச் சருவேசுரனுக்கு நன்றி கூறுங்கள்.

அண்ணா.

# விடுதலை — வே. பிலிப்பு

கற்பனை உலகிற் சஞ்சரித்துக் கொண்டிருந்த நேரத்தில் திடீரென என் கண்முன்னே ஒரு பெரிய உருவம் தோன்றிற்று. அது அவலட்சணம்நிறைந்து காணப்பட்டது. என் அருகே வந்து, "என்னைத் தெரியவில்லையா"? என்று வினவியது. "நான் உன்னை அறியேன்" என்று ஒரேயடியாகக் கூறிவிட்டு "நீ யார் என்றுதான் கூறேன்" என்றேன். "இதோ என்னைக் கேள்": என்று ஆரம்பித்தது அவ்வுருவம்.

"காயீன் ஆபேல்காலத்தில் நடந்த முதன்முதற் கொலைக்கே காரணமாய் இருந்தவன் நான் தான். ஆபேலுடைய பலியைச் சருவேசுரன் ஏற்றுக்கொண்டதினால் காயீன் மனதில் நான் தீயாக எரிந்து கொண்டிருந்தேன். காயீன் நெஞ்சத்தில் ஆட்சிபுரிந்ததினாலேயே முதன் முதற் கொலை நடைபெற்றது.

"நான் அன்றும்இன்றும் எத்தனையோ உள்ளங்களில் ஆட்சி செலுத்திக் கொண்டுதான் இருக்கிறேன். என்னால் ஏற்பட்ட போர்கள் — அதனால் ஏற்பட்ட கொலைகள், கொடுமைகள் எத்தனையோ. உலக மக்கள் அனைவரும் ஒரே பிதாவின் பிள்ளைகள் —சகோதரர் என்ற உணர்ச்சியை மறைத்துப் பிறர்சிநேகத்துக் கெதிராகத் துரோகச் செயல்களைச் செய்யத் தூண்டிவிடுகிறேன்.

"தன் அயலவன்செல்வச் சிறப்போடு வாழ்வதைக் கண்டு சகிக்கமாட்டாதவர்களின் உள்ளங்களில் என் கைவரிசையைக் காட்டிவிடுகிறேன். என்னைத் தம் மனதில் இருத்திக் கொண்டு வாழ்க்கைநடத்துபவர்களின் மனதில் நிம்மதி என்பது எள்ளளவும் கிடையாது. எப்படியாவது மற்றவர்களைக் கெடுத்துவிட வேண்டுமென்ற தாகம் அவர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. [illegible]யோ கள்ள வழக்குகளைத் தொடுப்பதற்கும் நானே காரணமாய் இருந்திருக்கிறேன்."

இவ்வாறு அந்த உருவம் கூறிக்கொண்டிருக்கும்போது நான் இடைமறித்து, "இப்பொழுது உன்னைப்பற்றி எனக்கு நன்ருக விளங்குகிறது. மனித சமுதாயத்தில் இருந்து உனக்கு விடுதலை அளிக்கநாம் என்னசெய்ய வேண்டுமென்று கூறமுடியுமா" என்றேன்.

அதற்கு அவ்வுருவம், "இதுதான தெரியாது, பிறர்சிநேகக் கற்பனையை அனுசரித்து நடப்பவர்கள் மத்தியில் நான் சஞ்சரிக்க முடியாது. அயலவனுக்கு வரும் செல்வச் சிறப்புகளோ, துன்பங்களோ தமக்கு வந்தாற்போல நினைத்து வாழ்கிறவர்களும் இருக்கத்தான் செய்கிருர்கள். இப்படி எல்லாரும் இருந்துவிட்டால் எனக்கு நிரந்தர விடுதலை தான்" என்று கூறிவிட்டு அவ்வுருவம் மறைந்துவிட்டது.

## முனைப்பு

— சி. சுதந்திரராஜா —

குடிசை கோபுர மாகிடவே
கோடைக் கோலம் போயிடவே
அடிமை அவலம் அழிந்திடவே
— உயர்
அன்பில் நன்கு வாழ்ந்திடடா!

மேடும் பள்ளமும் இல்லாத
மேவிய உலகம் உருவாக
காடுங் களனி யாகிடனும்
— அங்கு
கருணைக் கதிரே பூத்திடணும்!

பேதம் பேசுதல் போயிடவே
பேதமைப் பாதை மாறிடவே
பூதம் போலொரு பூமிதனை — நல்ல
பொலிவொடு புனைய முனைந்திடடா!

பண்பு ஒளிர்கிற பாரினையே
பஞ்சம் ஒழிந்த பாரினையே
கண்டு களித்திட விரும்பிடுனே
— உன்றன்
கயமை நரிகளைக் கொன்றிடடா!

# மூன்றும்முறை வெற்றி

(சாள்ஸ் வர்கீஸ்)

ஞாயிற்றுக்கிழமை, காலை ஆறு மணி! டாங்... டாங்— டாங்... என ஆலயமணி ஒலித்தது. பிரான்சிஸ் கோயிலை நோக்கி நடந்து கொண்டிருந்தான். அந்நேரம் அவன் எண்ணமெலாம் திவ்விய யேசுவை நினைத்தே அலைபாய்ந்து கொண்டிருந்தது. "இவ்வளவு காலமும் நான் பூசை கண்டு, தேவநற்கருணை உட்கொள்ளவில்லையே. கடன்திருநாட்களில் பங்குகொள்ளவில்லையே; பாவசங்கீர்த்தனம் பண்ணவில்லையே" என்று தன் மனதுள்ளே நொந்து கொண்டான். ஏதேதோ எண்ணங்களுக்கிடையே கோயிலை வந்தடைந்தான். அவன் கோயிலினுள்ளே வந்ததும் முழந்தாட்படியிட்டு, தன் கால்சட்டைப் பையிலிருந்த செபமாலையை வெளியே எடுத்து செபம் செய்யத் தொடங்கினன். பிரான்சிஸ் செபம் செய்து கொண்டிருந்தபோது குருவானவர் சொன்ன சில வார்த்தைகள் அவன் காதில் விழுந்தன. "ஒருவன் பாவ மன்னிப்பையடைய தான் செய்த பாவங்களுக்காக மிக உருக்கமாக மனஸ்தாபப்பட வேண்டும்." இவ்வார்த்தைகள் அவன் மனதை ஏதோ செய்தது. எழுந்து நின்ருன். செபமாலையை கால்சட்டைப்பைக்குள் போட்டுக் கொண்டு, குருவானவரின் பிரசங்கத்திலேயே கவனம் செலுத்தினன்.

பிரான்சிஸுக்கு பெற்ருேர் இருந்தனர். சகோதரர் இல்லை; அவன் இருபத்தொரு வயது நிரம்பிய வாலிபன். பதினறு வயதாக இருந்தபோது அவன் கல்வி பொதுத்தராதரப் பரீட்சை எழுதினன். அப்பொழுது தான் அவனுக்குமுதல் அனுபவம் பரீட்சை எழுதுவதில். மாதா கோயிலுக்குப்போய் மெழுகுதிரி பற்றவைத்து, தான் பரீட்சையில் பாசாக வேண்டுமென்று தேவமாதா முன்னிலையில் இரந்துவேண்டினன். பரீட்சை எழுதினன். பல மாதங்களுக்குப் பின்பு பரீட்சை முடிவுகள் வந்தது. அவனுக்கு அதிர்ச்சி! தோல்வி! ஏமாற்றம்! ஆம்! அவன் பரீட்சையில் பெயிலாகியிருந்தான். அவன் சோர்ந்து போகவில்லை: "இது முதல் தடவைதானே, மறுமுறையும் முயற்சிசெய்வோமே" என்று மறுமுறையும் பரீட்சை எழுதினன். பரீட்சை எழுதும் முன்பு, முன்பு செய்தது போலவே தேவமாதாவை வேண்டினன். மாதங்கள் பல உருண்டோடின. மறுமுறையும் பரீட்சை முடிவு. இம்முறையும் அவனுக்கு அதிர்ச்சி, ஏமாற்றம்; எல்லாப் பாடங்களிலும் பெயிலாகியிருந்தான்; "இதென்னடா இரண்டு தடவையும் பரீட்சை எழுதி, இரண்டு தடவையும் பெயிலாகிவிட்டோமே.....கடவுள் நம்மை ஏறெடுத்துப் பார்க்கிருர் இல்லபோல..அப்படீன்ன..நாம் இத்துடன் கோயிலுக்கு முழுக்குப் போட வேண்டியதுதான்" என்று அவன் தவருக முடிவு கட்டிவிட்டான்.

கெட்ட நண்பர்களுடன் அவன் சேர்ந்துகொண்டதால், நாள் செல்லச்செல்ல அவனும் கெட்டவனுனன். அவன் கோயிலுக்குப் போய் வருகிறேன் என்று வீட்டில் தன் பெற்ருேர்களுக்குச் சொல்லிவிட்டு கெட்ட நண்பர்களுடன்போய் ஊர்சுற்றிவிட்டு வருவான். ஆனல், பிரான்சிஸ் அன்று ஞாயிற்றுக்கிழமைப்பலி பூசைக்கு வந்திருந்ததற்குக் காரணம் அவனது ஒழுக்கமுள்ள நண்பன் விமலனின் ஓயாத நச்சரிப்பினுல்தான். பிரான்சிஸுடைய நடத்தை அவனுக்குத் தெரிந்திருந்தது. அதனல் தான் விமலன் பிரான்சிஸை கோயிலுக்குப் போகும்படி ஓயாமல் எச்சரித்து வந்தான். விமலனின் நல்லெண்ணப்படிதான் அன்று பிரான்சிஸ் கோயிலுக்கும் வந்திருந்தான். குருவானவருடன் பலிப்பூசையில் ஒன்றினன். திவ்விய யேசுவை நோக்கி பிரான்சிஸ் தன் மனதுள் மன்னிப்பிரந்து உருக்கமாக மன்ருடினன். பூசை முடிந்தது. எல்லோரும் கோயிலிலிருந்து வெளிவந்து கொண்டிருந்தார்கள். பிரான்சிஸும் ஒரு புதுமனிதனுய் கோயிலைவிட்டு வெளியே வந்தான். அவன் வந்து கொண்டிருந்தபோது, 'பிரான்சிஸ்" என்றொரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான். விமலன் நின்று கொண்டிருந்தான். "விமலன், நீ கோயிலில் இருந்தாவர்றே என்னப்பா நான் உன்னைக் காணவில்லையே" என்ருன் பிரான்சிஸ் ஆச்சரியமிகுதியால். "பிரான்சிஸ், நான் கோயில்லே தாண்டா இருந்தேன்; உன் செய்கை எல்லாம் ஒரு ஓரத்திலே இருந்து பார்த்துகிட்டிருந்தேன், நான் சொன்னபடி யால் நீ ஏதோ பெயரளவில் கோயில்லே போய் சும்மா இருந்துவிட்டு வருவியோன்னு நினைச்சிருந்தேன். ஆனல், நான் நினைச்சதுக்கு மாரு நல்லபடியாய் நடந்துகிட்டே. உன் செய்கைகளால் நான் மிகவும் சந்தோஷமடைந்தேன்டா" என்ருன் விமலன். "ஆமாம்டா! இனி நான் என்றும் நல்ல மனிதனு இருப்பேண்டா. உன் உபதேசங்களால்

[மறுபக்கம் பார்க்கவும்]

# வேப்பமரம் பேசுகிறது

ஹலோ நான் தான் வேப்பமரம் பேசுகிறேன். இதென்ன சிறுவர் விருந்து தானே. சரி, சரி என்னை நீங்கள் கண்டிருக்கிறீர்கள். ஆனல் நான் பேசியதை நீங்கள் கேட்கவில்லை, இப்போது கேளுங்கள். நீங்கள் பாடசாலைக்குச் செல்லும் வழியில் நான் நிற்கிறேன். எனினும் உங்களுடைய கல்லூரி வாழ்வின் நாளாந்த நிகழ்ச்சிகள் சிலவற்றில் எனக்குப் பங்குண்டு. பாடசாலைநாட்களில் நீங்கள் என்னருகேவந்து குளிர்மிகுந்த என் நிழலின் கீழ் மகிழ்ச்சியுடன் விளையாடுகிறீர்கள். உங்கள் மகிழ்வைக் கண்டு எனக்குண்டாகும் தாய்மை உணர்ச்சிக்கு அளவே இல்லை.

பாட நேரங்களில் வகுப்பிற்குச் செல்ல மறுக்கும் மாணவர்கள் சிலர் என்னைத் தங்களது ஒதுக்கிடமாகக் கொள்கின்ருர்கள். எனக்கு விருப்பமில்லாத இச்செயலுக்காக அவர்களைக் கண்டித்து காட்டிக்கொடுத்தாக வேண்டுமென்றே நான் பெரிதும் விரும்புவேன். ஆயினும் அம்மாணவர்மீது உண்டாகும் பரிதாப உணர்ச்சி மிஞ்சிவிடவே மௌனம் என்னும் ஆபரணத்தை அணிந்துகொண்டு அவர்களுக்குப் புகலிடம் அளித்து விடுவேன். பாடவேளைகளின் முடிவுதோறும் கேட்கப்படும் மணியொலியால் என்மீது அமர்ந்திருக்கும் பறவைகளும், அணில்களும் அவ்வப்போது வெருண்டு தாமும் எதிர்க்குரல் கொடுக்கும்.

எனது இடப்பக்கத்தில் இருக்கும் கடலைக்காரியும் எனது நெடுநாட் சிநேகிதியாவாள். அவளும் நானும் உங்கள் நடைகுணங்களைப் பற்றிக் கதைப்போம். பாடசாலை மணியோசை கேட்டதும் அந்த நன்றி கெட்ட சிநேகிதி என்னை அடியோடு மறந்துவிடுவாள். வியாபாரம் மும்முரமாக நடைபெறும்பொழுது குறும்புச் சிறுவர் கடலைச் சுருள்களைக் களவாடிச்செல்வர்; இதனல் அவர்கள் அவளின் துர்ப்பேச்சுகளுக்கு ஆளாவர். பெற்ருேர்களே உங்கள் வருங்காலச் சிருர்களுக்கு நற்பழக்கங்களைப் பழக்கிக் கொள்ளுங்கள். எனது வாழ்நாளில் இன்ப துன்பங்கள் சக்கரம் போல சுழன்று என்னை மிகவும் வாட்டுகின்றன. சரி நிறுத்தட்டுமா?

வணக்கம்.

செ. சாள்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சேரி பஸ்

(சென்றவாரத் தொடர்ச்சி)

படத்தை ஓவியர் வரைய வரைய தேவசகாயத்தின் முகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. வெளிறிய அந்தச் சோக உடம்பிலே ஒரு மாறுதல், ஒருவித விறுவிறுப்புக் காணப்பட்டது. அந்த இரத்த விழிகள் பயங்கரமாய் தன் சித்திரத்தைப் பார்த்துப் பதறின. தேவசகாயம் தனது முகத்தைத் தன் கைகளால் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழலானான். பிறகு வெகுநேரங் கழித்துக் கண்களை நிமிர்த்தி, முதிய ஓவியரது முகத்தை நோக்கி தழுதழுத்த குரலில், "என்னை உங்களுக்கு ஞாபகமில்லையா? பலவருஷங்களுக்கு முன்னே குழந்தை யேசுவின் முகத்தைச் சித்திரித்தீர்களே; அதற்கு மாதிரியாயிருந்தது என்முகமே அல்லவா! அன்று எனது பன்னிரண்டாவது பிறந்த தினத்திற்கு எனது தாயாரைக் கல்வியூட்டி வளர்த்த திருக்குடும்பப் பெரியதாயாரிடம் நான் பெற்றோரோடு வந்தேன். அங்கு தான் என்னை நீங்கள் கண்டீர்கள்." என்று தேவசகாயம் கூறிமுடிப்பதற்குள் ஓவியர் மிகவும் ஆச்சரியப்பட்டவராய் அவனை வேதனைக் கண்களோடு உற்றுநோக்கினார். அன்று திருக்குடும்பத்தாயார் சொன்ன இரகசியத்தைத் தழுதழுத்த குரலில் தேவசகாயத்துக்குச் சொல்லுகிறார்: "மகனே! உனது அழகிய முகத்தைக்கண்டு மயங்கிய நான் பெரியதாயாரிடம் உனது பூர்வீகத்தை யறிய ஆசைப்பட்டேன். நீ ஓர் அனாதையாகக் கன்னியர் மடத்தில், யாழ்ப்பாண அரசினர் வைத்திய சாலையில் முன்பு பணிபுரிந்த கன்னியாஸ்திரிகளால் ஒப்படைக்கப்பட்டீர், உமக்கு வயது இரண்டாயிருக்கும்போது பிள்ளையில்லாக்குறையை நிவர்த்தி செய்ய அரும்பாடுபட்ட, நல்லூரைச்சேர்ந்த குமாரசாமி தம்பதிகளுக்கு உம்மை வளர்ப்பு மகனாகத் தாயார் ஒப்படைத்தா. நீர் குழந்தைப் பருவத்திலேயே இளவாலைப் பங்குக் கட்டளைக் குருவால் ஞானஸ்நானம் பெற்றுத் "தேவசகாயம்" என்னும் நாமம்பூண்டதாகவும் தாயார் எனக்குச் சொன்னா," என்று முடித்தார் ஓவியர் பெனடிக்ற்.

தேவசகாயம் வீடுநோக்கிச் செல்லுகிறான். அங்கே லூர்துவையும் பிள்ளைகளையும் காணவில்லை. வீடு பூராக அமைதி நிலவுகிறது. மனக்கலக்கத்தோடு வெளி விறுந்தையில் வந்தமர்ந்தான். அவனுடைய சோகக்கண்கள் பஞ்சடைந்திருந்தன, ஆனால் ஒளி வீசியது. அவனது சிந்தனைக் கண்கள் சுற்றுலாவிய போது மழையில் நனைந்த ஒரு வெள்ளித் தகடு இளஞ் சூரிய ஒளியில் மின்னிமின்னி அவன் கண்களில் பட்டது. ஒளிவீசிய வெள்ளியைத் தோண்டியெடுத்தான். என்ன ஆச்சரியம்! அது ஓர் செபமாலையாகவேயிருந்தது. மாலையைக்கையில் ஏந்திக் கற்களை உருட்டி உருட்டி அதன் அழகை அனுபவித்துக் கொண்டு இருந்தபோது, அரை மணி நேரத்துக்குமுன் புனித அன்னம்மாள் கோவிலில் அன்னை மேரியின் திரு உருவத்தைப் பார்த்து அழுது அழுது வீங்கிய கண்களுடன் வீட்டை நோக்கிவந்த லூர்துவின் கண்களில் இந்தக்காட்சி பட்டது. லூர்து தன்கண்களையே நம்ப முடியாதவளாய் தன் கணவனைப் பார்த்து, "என்ன! நீங்களா? செபமாலை ஏது? இது என்னுடைய செபமாலை எங்கேகண்டீர்கள்? சில வருடங்களுக்குமுன் என் கைகளில் இருந்து தவறிய இந்த மாலை இப்போ உங்களுக்குஎப்படிக் கிடைத்தது?" என்று பதறிப் பதறிக் கேட்டாள். "மழை நீரால் கழுவப்பட்டுத் தெருக் கதவடியில் இருந்து மின்னிக் கிடந்த மாலையிது" என்று அமைதியாகப்பதில்கூறினான்.

தேவசகாயத்தின் மனமாற்றத்தையும், அவனுடைய மறைந்த செய்திகளையுமறிந்த லூர்து புனித அன்னம்மாள் தேவாலயத்தின் கட்டளைக் குருவரிடம் நடந்தவற்றைக் கூறித் தவறிப்போன தங்கள் சமயக் கடமைகளை நிறைவேற்றினர். மீண்டும் லூர்துவின் குடும்பத்தில் வாழ்வின் ஒளி பிரகாசித்தது. குடும்ப செபமாலையும், திவ்வியபூசைப் பலியில் பங்குபற்றுதலும் அவர்கள் வழக்கமாகிவிட்டது. ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பம் அகமகிழ்ச்சியில் மூழ்கியது. நாட்கள் பல செல்லவில்லை. ஒருநாள் தங்கள் திருமணவாழ்வின்பத்தாம் ஆண்டு நிறைவு தினத்தில் பாவசங்கீர்த்தனம் செய்து, திவ்விய பூசையில் பங்குபற்றித் திருவிருந்தருந்திய பின் தேவசகாயம் தனது டியூட்டிக்குப் புறப்பட்டான். அன்றுஅவன் மனதில் என்றுமில்லாத மகிழ்ச்சி, அவன் உள்ளத்திலும் இல்லத்திலும் பரிசுத்த பிதாவின் ஆசீர்வாதம் பொங்கி யெழுந்தது. சி. ரீ. பி. 618 இலக்கத் தகட்டையுடைய காக்கிச் சட்டையுடனும், டிக்கட் கட்டையுடனும் தேவசகாயம்கந்தோரிலிருந்து புறப்பட்டுத் தனக்கென நியமிக்கப்பட்ட இரட்டைத் தட்டு கச்சேரி பஸ் இருந்த இடத்திற்குச் சென்று 'டிங், டிங்' மணியை அடித்தான். அந்தோ பாவம்! யார் அறிவார்? திடீரெனச் சாய்ந்தான், புரண்டான், மாரடைப்பு அவனை நித்திய சமாதானத்துக் குள்ளாக்கியது. சாகும் நேரம் வருவது அறியாது இருந்த அவனுக்கு ஆண்டவன் அருளிய வரப்பிரசாதம் 'நல்லமரணம். தூய உள்ளத்தோடு, தேவனின் சகாயத்தோடு, தேவசகாயத்தின் ஆன்மா நித்திய இளைப்பாற்றியடைந்தது. 'கச்சேரி பஸ்' உருவில் வந்தகடவுளின் சாயல் நீண்டநாள் அஞ்ஞானத்திலும் இருளிலும் இருந்த ஆன்மாவை ஈடேற்றியது.

(யாவும் கற்பனை)

எவ், சி, வேதநாயகம்

G. C. E. (Ordinary Level)

# கிறிஸ்தவம்

க. பொ. த. பத்திரப் பரீட்சைக்குரியது (மார்கழி 1969)

— சிஸ். அன்ரனி யோசவ் —

## புனித லூக்காஸ் சுவிசேஷம்

### வினா 8.

**கிறிஸ்துவின் வாழ்க்கையோட்டத்திலிருந்து செபத்தின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் புனித லூக்காஸ் எவ்வாறு எடுத்துக் காட்டுகின்றார்.**

மூன்றும் சுவிசேஷம் தேவாலயத்தில் நடைபெறும் பயபக்திக்குரிய பொதுச் செபத்துடன் தொடங்கி (1:8), "சீடர்கள் கிறிஸ்துவின் ஆரோகணத்திற்குப் பின்பு எப்பொழுதும் தேவாலயத்தில் சருவேசுரனைத் துதித்துப் புகழ்ந்துகொண்டிருந்தார்கள்" என்றுகூறி முடிகிறது (24:53). ஏனைய சுவிசேஷங்களிலும் பார்க்க புனித லூக்காஸ் நமது ஆண்டவர் செபிப்பதை அநேகந் தடவை குறிப்பிடுகிறார். ஞானஸ்நானம் பெற்ற பின்பும் (3 : 21), குஷ்டரோகியைக் குணமாக்கியபின்பும் (5 :...), பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தெரிவுசெய்யு முன்பும் (6:12), புனித பேதுருவானவரின் விசுவாச உச்சாரணத்திற்கு முன்பும் (9 : 8), மறுரூபமான பொழுதும் (9:28), தமக்குச் செபிக்கக் கற்றுத் தரும்படி சீடர்கள் கேட்குமுன்பும் (11 : 1), பேதுருவானவரை விசுவாசத்தில் உறுதிப்படுத்தும்படியாகவும் (22 : 32), தன்னைக் கொலை செய்பவர்களுக்காகவும் (23:34), மாணிக்குமுன்னும் (23 : 46), கிறீஸ்து செபித்ததைப் புனித லூக்காஸ் எடுத்துக் காண்பிக்கின்றார். மேற்கூறிய சந்தர்ப்பங்கள் யாவும் புனித லூக்காசின் விசேஷ அம்சங்கள்.

செபத்திற்கு இருக்கவேண்டிய குண இயல்புகளைப் பின்வரும்உவமைகள் காண்பிக்கின்றன. இவையும், புனித லூக்காஸ் சுவிசேஷத்தின் விசேஷ குண இயல்புகளாம். அலட்டுகிற சிநேகிதன் (11:5), அலட்டுகிற விதவை (18 : 1), பரிசேயனும் ஆயக்காரனும் (19 : 9) என்பவைகுறிப்பிடத்தக்கவை. மேலும் சுவிசேஷம் முழுவதிலும் நன்றியும் சந்தோஷமும் ஆகிய உணர்ச்சிகள் இழையோடுகின்றன. விசேஷமாக முதல் இரு அத்தியாயங்களிலும் உள்ள தோத்திர கீதங்கள் குறிப்பிடத்தக்கவை. இதனாலே மூன்றும் சுவிசேஷத்தை "நன்றியறிதலின் சுவிசேஷம்" எனவும் கூறுவர்.

தேவதூதர்களினால் இறைவன் மகிமைப்படுத்தப்படுவதை ஆர்ப்பரிப்புடன் கூறுகின்றது (2:13), பெத்லகேமில் இருந்து திரும்பும் இடையர்களின் நன்றிச் செபம் (2 : 20), திமிர் வாதக்காரன் குணமாக்கப்பட்டபின்பு கூறிய நன்றியறிதற் செபம் (5 : 25), விதவையின் மகன் மாணத்திலிருந்து உயிர்த்தபின்பு அதற்குச் சாட்சிகளாயிருந்து இறைவனை வாழ்த்தியவர்கள் (7 : 16), நோக்காட்டு அரூபி பிடித்த பெண்ணின் நன்றியறிதல் (13 : 13), சமாரித்த குஷ்டரோகியின் நன்றி (17 : 15), [illegible] னின் செபம் (18 : 43), கிறிஸ்துவின் மாணத்திற்குப் பின்பு செந்தூரியன் கூறிய செபம் (23 : 47) இவை யாவும் புனித லூக்காஸ் குறிப்பிடும் விசேஷ செபங்களாகும். பின்வரும் சங்கீதங்கள் புனித லூக்காசுக்கு விசேஷமானவை (1 : 28—33), மரியாளுக்கு மங்களம் கூறுதல் (1 : 46—55), மரியாயின் நன்றிக் கீதம் (1 : 68—70), சிமியோனின் நன்றிக்கீதம் (2 : 14), தேவதூதர்களின் கீதம் 2 : 29—32) சிமியோனின் கீதம்.

செபத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுவதற்காக அவர் கிறீஸ்துவின் முன்மாதிரிகையை எமக்கு முன் வைக்கின்றார் (3 : 21, 5 : 16, 6 : 12, 9 : 18, 22 : 41, 23 : 34, 23 : 46).

செபம் ஒரு கடமை என்பதைக் காட்டுவதற்காகப் பின்வரும் உதாரணங்களைக் காண்பிக்கின்றார் (10 : 2, 11 : 2, 21 : 36, 22 : 40).

செபத்திற்கு எம்மை ஊக்கப்படுத்தும் நோக்கமாகப் பின்வரும் உதாரணங்களைக் கூறுகின்றார் (11 : 5—12, 18: 1 : 7, 18 : 10—14).

ஈற்றில் நாம் செபத்தில் கொண்டிருக்க வேண்டிய மனப்பான்மையைப் பரிசேயன், ஆயக்காரன் (தாழ்மை), என்னும் உவமையினாலும், செபத்தின் முக்கியத்துவத்தை கிறீஸ்துவின் வாழ்க்கையிலிருந்தும், அதன் கடமையையும் அதற்கு எம்மை ஊக்குவிக்கும் முகமாக அலட்டுகிற சிநேகிதன், விதவை போன்ற உவமைகளினாலும் தெளிவாக விளக்குகின்றார்.

# மூன்றும் முறை...

(சிறுவர்பக்கத் தொடர்ச்சி)

நான் நல்லவனா திருந்திவிட்டேன்டா" என்றான் பிரான்சிஸ். "பிரான்சிஸ் நீ இந்த வருஷம் பரீட்சை எழுதினாய் தானே ?" என்றான் விமலன். "ஆமாடா! எழுதினேன். இந்தத்தடவை கட்டாயம் பரீட்சையிலே பாசாகி விடுவேன்னுநம்புறேன்டாஎன்று இருவரும் பேசியவண்ணமே தத்தம் வீடுசென்றனர்.

பிரான்சிஸ் புதியமனிதனாய் வீட்டினுள் புகுந்தான். மாதங்கள் பலஉருண்டன; அன்று பரீட்சை முடிவுகள். தபால்காரன்கொடுத்த நீண்டதபாலைச் சீக்கிரம் சீக்கிரமாகப்பிரித்துப்பார்த்தான்; மகிழ்ச்சியின் அக்களிப்பால் துள்ளிக் குதித்தான். அவன் மகிழ்ச்சிக்குக் காரணம்? வெற்றி! ஆம்வெற்றியேதான் அவன்நம்பிக்கையால் விளைந்த பெரும்வெற்றி! தான் எல்லாப் பாடங்களிலும் பாசாகியிருந்ததை பெற்றோர்களுக்கு வாசித்துக் காட்டினான்: அவன் பெற்றோர்கள் — அவனை — கட்டித்தழுவினர். சந்தோஷப்பட்டனர். அந்த நற்செய்தியை அறிவிக்க விமலனிடம் ஓடினான். பிரான்சிஸ் சொன்ன செய்தியை விமலன் கேட்டதும் அவனுக்கு இருப்புக்கொள்ளவில்லை. அவன் பிரான்சிசை அப்படியே கட்டித் தழுவிக் கொண்டான். இருவரும் நீண்ட நேரம் அளவளாவிக்கொண்டிருந்துவிட்டு பிரிந்தனர். பிரான்சிஸ் வீட்டுக்கு வந்ததும் தன் பெற்றோர்களுக்கு—தான் கடந்த நாட்களில் வாழ்ந்த நாஸ்திக வாழ்க்கையைச் சொல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. சுருக்கமாகவும், விளக்கமாகவும் எல்லாவற்றையும் சொன்னான். தான் நல்லவனாய் திருந்தியதற்குக் காரணம் விமலனே என்றும் எடுத்துரைத்தான். அவன் பெற்றோர்கள் விமலனைப் போற்றிப் புகழ்ந்தனர். விமலனும் அவனைப் போற்றினான்; வாழ்த்தினான். பிரான்சிஸ் இப்பொழுதெல்லாம் உண்மையான கிறிஸ்தவன்,

## நெஞ்சம் மறப்பதில்லை!

திருமதி ஜெயபாக்கியம் கோன்ஸ்ரன்ரைன் அவர்களின்

### அமரதின நினைவு

13—11—1897 24—9—1967

அம்மா!..... என்றே ஆசையுடன்
அழைத்திடவோ யாருமில்லை!......
அம்மா!......என்றழைத்திடினும்
அரவணைப்பார் எவருமில்லை!.........
அம்மா!..... என்றழைத்த ஒலி
அடங்கியது எம் வீட்டில்!......
அம்மா!...... என்ற அழுகையொலி
எழுந்ததுவோ எம் மனதில்!......
அம்மா......நின் அன்புமுகம்
கண்ணீரில் கண்டதுண்டு!......
அம்மா!......நின் அரவணைப்பை
அடைந்ததில்லை ஈராண்டு!.. ...
அம்மா!......உன் புகழ்பாட
ஆண்டில் வரும் அமரதினம்!.........
அம்மா!......உனை நினைத்திடவே
ஆசைகொள்ளும் எம் நெஞ்சம்!... ..

இவரின் ஆத்தும சாந்திக்காக புரட்டாசி 24-ம் திகதி காலை 5-30-க்கு யாழ்ப்பாணம் சந்தியோகுமையோர் கோவிலில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

111/69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குத்தத்தத்தின் பெட்டகமே! நீர் கொண்டுள்ள அற்புத இரகசியங்களின் மகிமையை எப்படி விளக்குவது?

புரட்டாசிமாதம் 8-ம் நாள் நம் மீட்பரின் அன்னையாகிய தேவ தாயின் பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறேம். இப்புனிதவதியை இறைமக்கள் தத்தம் நம்பிக்கையின்படி இறைவனின் அருளை அவளில் கண்டு பற்பல நாமங்களால் அழைக்கின்றனர். சிலர் வாக்குத்தத்தத்தின் பெட்டியென்றும், சிலர் தாவீதின் உப்பரிகையென்றும், வேறுசிலர் மோசேஸ் கண்ட முட்செடியென்றும், இன்னும் சிலர் பாவிகளுக் கடைக்கலம் என்றும், தபோதனர், துறவிகள், புனிதர்களின் மேல்வரிச்சட்டமென்றும் ஆழமான கருத்துள்ள சொற்களால் அழைக்கின்றனர், வாழ்த்துகின்றனர், போற்றுகின்றனர், புகழ்மாலை சூடுகின்றனர். ஆம், அப்பரிசுத்த இராணி அதற்குகந்தவளே. பூமியில் பிறந்தமானிடர் யாவரிலும் மேலான வரத்தைப் பெற்ற இப்பாக்கியவதி ஏன் வாக்குத்தத்தத்தின் பெட்டகம் என்று அழைக்கப்பட்டாள் என்பதைமாத்திரம் ஈண்டு ஆராய்வோம்.

இஸ்ருயேல் மக்கள் இறைவனால் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டபோது அவர்களுக்கு வழிகாட்டியாயிருந்த மோசேசையும், ஆரோனையும் கடாட்சித்த இறைவன் அவர்களைச் சலிப்படையவிடாது, அவர்களுடன் அடிக்கடி உரையாடி தூயஆவியானவரின் அருட்கொடைகளையும், அவ்வருளின் வெளியடையாளமான சில சின்னங்களையும் கொடுத்துதவினர். அவ்வடையாளங்களாகிய சின்னங்களில் சர்ப்பமாகமாறி பார்வோனை அச்சுறுத்தியகோல், இறைவனால் அருளப்பட்ட கற்பனைப் பலகை, இஸ்ருயேல் மக்களுக்கு அற்புத உணவாக வானத்திலிருந்து வருஷிக்கப்பட்டமன்ன இவை மூன்றையுமே உடன்படிக்கைப் பெட்டகத்துள்வைத்து, தமது இரட்சிப்பின் சின்னமாகவும், வெற்றியின் அடையாளமாகவும்பாதுகாத்துவந்தனர் இப்பெட்டகத்தில் மறைந்திருந்த பொருட்கள் இறைமக்களை விசுவாசத்தின் புத்திராக்கி, இரட்சகரின் வருகையை ஆவலுடன் காத்திருக்கச்செய்ததுமன்றி தருணதருணத்தில் பல புதுமைகள்புரிந்து இறைவாக்கில் நம்பிக்கைவைக்கவும் செய்தது.

இங்கு நாம் நம் தேவஅன்னையை வாக்குத்தத்தத்தின் பெட்டகமே என்று அழைக்கிறேமே. இதன் காரணந்தான் என்ன? இறைமக்களுடன் உரையாடிவந்த கற்பனைகளைக் கொடுத்த அதே இறைவார்த்தையே இஸ்ருயேல் மக்களுக்குப் புதுமைகள் பலபுரிந்த அதே தூயஆவியானவரின் அருளால் புதுமையாகக் கன்னிமரியிடம் இரட்சிப்பின் திருச்சுதனுகக் கெற்பமாய் உருவானர். என்ன அதிசயம்! எவ்வளவு அற்புதம்! பரிசுத்த பரம திரித்துவமே முழுமையாகக் கன்னிமரியிடம் இடம் பெற்றுவிட்டார்கள். இப்போ உண்மையான உடன்படிக்கைப் பெட்டகமாக மாறிவிட்டாள் அல்லவா? இரட்சிப்பின் சின்னமாக அமைந்த உடன் படிக்கைப் பெட்டகம் இறைமக்களை இரட்சகரின் வருகைக்குத் தயாரித்ததென்றல், வாக்குப்பண்ணப்பட்ட இரட்சகரையே தன்னிடம் கொண்டுள்ள கன்னிமரியை ஏன் உண்மையான வாக்குத்தத்தத்தின் பெட்டகம் என்று அழைக்க முடியாது? அழைக்கிறேம். அழைக்கப்படமுற்றிலும்தகுதியுடையவள்.

நம் இரட்சகரின் அன்புச் சீடராகிய புனித அருளப்பர் காட்சிஆகமத்தில் தாம்கண்ட காட்சிகளை எழுதும்போது (காட்சி ஆக. 11-ம் அதி. 19-ம் வச.) "அப்போது பரலோகத்தில் சருவேசுரனுடைய ஆலயம் திறக்கப்பட்டது. அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கைப் பெட்டகம் தோன்றியது" என்றும் தொடர்ந்து (அடுத்த 12 ஆம் அதிகாரத்தில்) "அன்றியும் வானத்தில் ஒருபெரிய அடையாளம் காணப்பட்டது. ஒரு ஸ்திரி சூரியனை ஆடையாக அணிந்திருந்தாள். அவளுடைய பாதங்களின்கீழ் சந்திரனும், அவளுடைய சிரசின் மேல் பன்னிரு நட்சத்திரங்களுள்ள ஒருகிரீடமும் இருந்தன. வானத்தில் வேறொரு அடையாளம் காணப்பட்டது. அதாவது ஏழுதலைகளையும், பத்துக் கொம்புகளையுமுடைய சிவப்பான ஒரு பெரிய பறவை நாகம் தோன்றியது. அந்த ஸ்திரி பிள்ளை பெற்றவுடனே அந்தப்பிள்ளையை விழுங்கிப் போடும்படிக்கு அவளுக்கு முன் நின்றது. சகலஜனங்களையும் இரும்புக்கோலால் அரசாட்சிசெய்யும் ஆண்குழந்தையை அவள் பெற்றாள். அவளுடைய பிள்ளை சருவேசுரனிடத்துக்கும் அவருடைய சிங்காசனத்துக்கும் எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்தஸ்திரியானவள் வனாந்தரத்துக்கு ஓடிப்போனாள். அங்கே ஆயிரத்திருநூற்றறுபதுநாளளவும் அவளைப் போஷிக்கும்படி சருவேசுரன் அவளுக்கு ஓர்இடம் ஆயத்தம் பண்ணியிருந்தார்" என்றும் எழுதியிருக்கிறார். இப்படியே காட்சிஆகமத்தில் கன்னிமரியின் மகத்துவம் அவள்பெருமை, இரட்சிப்பில் அவளது போராட்டம் முழுவதும் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கிறது.

பன்னிரண்டு கோத்திரங்களையும், பன்னிரண்டு அப்போஸ்தலரையும் குறிக்கும் பன்னிரண்டு நட்சத்திரம் கன்னிமரியாய்க்கு முடியாக அமைந்ததென்றால், அவளின் மகிமையை யாரால் வர்ணிக்கமுடியும்? சகல ஜனங்களையும் ஆளும் இரட்சகரின் தாய்அல்லவா அவள்? "வல்லபம் மிக்கவர் பெருமை உள்ளவைகளை என்னிடம் செய்தருளினர். இதோ இக்காலமுதல் தலைமுறை தலைமுறையாக என்னைப் பாக்கியவதி என்பார்கள்" என்று அவள் தூயஆவியானவரின் ஏவுதலால் பாடியதன் அர்த்தம்தான் என்ன? இவ்வானுலக இராணிபாடிய கீதத்தைத் தொடர்ந்து பாடுபவர்க்கு உள்ளபடியே இவள் படிக்கைப் பெட்டகம். வானுலகுக்கு இவள் தூயசடலம் எடுத்துக்கொள்ளப்பட்டதென்ற உண்மை தெளிவாக விளங்குக. அன்றியும் நம் தேவஅன்னை இவ்வுலகில் சீவித்தபோது இரட்சிப்பின் பரமஇரகசியங்களைத் தன்னிடத்தே பூட்டி மறைத்து, இறைவன் சித்தம் வருந்தனையும் இரகசியமாக வைத்திருந்தாள். தாம் தேவசுதனைக் கற்பந்தரித்தபோது பரிசுத்த பத்தர்வாகிய சூசையப்பருக்கு முதலாய்க் கூறவில்லை. முப்பதுவருடகாலமாய்த் திருமகனைப் பராமரித்தபோது இவரே உலகின் இரட்சகர் என்று எவருக்கும் அறியப்பண்ணவில்லை. இறைவன் எப்போ அவரை வெளிப்படுத்தச் சித்தங்கொண்டாரோ அப்போ தானும் உடந்தையாக நின்று அவருக்குச் சாட்சிபகர்ந்தாள். அவருடைய பாடுகளில் ஒன்றித்தாள். அவர் தம்மைதாமே மனுக்குலத்துக்காகப் பலியாக்கியபோது, தேவஅன்னையும் உடன்இரட்சகியாக நின்று சர்வவல்லபருக்குப் பலிஒப்புக் கொடுத்து, மனுக்குலத்தின் தாயானள். அத்துடன் பன்னிரு அப்போஸ்தலருடனும், காத்திருந்து செபித்துத் தூய ஆவியானவரைப் பெற்றுத் திருச்சபையின் ஆரம்பத்தில் பங்குபற்றித் திருச்சபைக்கும் தாயானள். கிறீஸ்துவின்தாய் கிறீஸ்துவைத் தலைமையாகக் கொண்ட திருச்சபைக்கும் தாய். பரிசுத்தரான கிறீஸ்துவைத் தாங்கிய இப்புனிதவதியின் சடலம் கிறீஸ்துவைப் போல் பரலோகத்தை நாடிப் பறப்பதில் என்ன அதிசயம் இருக்கிறது? காட்சிஆகமத்தில் கூறப்பட்டபடி பரி. அருளப்பர் உடன்படிக்கைப் பெட்டகத்தைப் பரலோகத்தில் காட்சியாகக் கண்டாரே! அந்த உடன்படிக்கைப் பெட்டகம் எது? இஸ்ருயேல் சனங்கள் தமது இரட்சிப்பின் சின்னமாகக் காவிவந்த வாக்குத்தத்தத்தின் பெட்டகமா? அல்லது கிறீஸ்துவை உலகுக்களித்த பரிசுத்த பரம திரீத்துவத்தின் இரகசியங்கள் உருவாகிய மரியம்மாள் என்னும பெட்டகமா? மரியன்னையே மேலோகத்தில் காணப்பட்ட உடன்படிக்கைப் பெட்டகம் என்றல, அவள் பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டாள். அவள் சடலம் உயிர் பெற்று, பரலோகத்துக்கு ஆரோபணமானள் என்ற திருச்சபையின் சத்திய வாக்கை நாம் முழுவிசுவாசமாய் ஏற்றுக்கொள்வோம்.

* * *

### ஒரு பகிடி

புனித அருளப்பர் காட்சியாகக் கண்ட பரலோகத்தில் காணப்பட்ட உடன்படிக்கைப் பெட்டகம், இஸ்ருயேல் ஜனங்கள் (பத்துக்கற்பனைப் பலகை, மன்ன, மோசேசின் கோல்) வைத்துப் பூசித்த வாக்குத்தத்தத்தின் பெட்டகம்தான் என்றல், வத்திக்கான் அரண்மனையில் அத்தனை புனித பொருட்களும் ஏ்தூலக பொருட்களாக மாறி, வானலோகத்தை நாடிப் பறக்கத் தொடங்கிவிடுமே; அப்படித் தொடங்கிஞல் முடிவென்ன? நம் மீட்பரின் பரிசுத்த குருதியால் நனைக்கப்பட்ட சிலுவை கிறிஸ்து உயிர்த்தெழும்பமுன் பறந்திருக்குமே!

ஆகையால், பரி. அருளப்பர் வானலோகத்தின் ஆலயத்துள் காட்சியில் கண்ட உடன்படிக்கைப் பெட்டகம் நம்பரிசுத்த அன்னையே. மெய்யாகவே அவள் சரீரம் உயிர்த்தெழும்பிப் பரலோகத்துக்கு ஆரோபணமானது என்று நம் திருச்சபை சொல்வது விசுவாச சத்தியங்களில் ஒன்று. 2-ம் வத்திக்கான் சங்கத்தின் பின் சில கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் தேவஅன்னை எப்படிப் பரலோகத்துக்கு எழுந்தருளக் கூடும். இது சுவிசேஷத்தில் கூறப்பட்டிருக்கிறதா? என்றெல்லாம் விசுவாசத் தளப்பம் கொள்கிறார்கள். தூயஆவியானவரின் துணையுடன் வேதாகமம் சுவிசேஷம் வாசியாததின் பயன் இது. புரட்டஸ்தாந்தரும் இப்படி அரைகுறையான விளக்கமே கூறுகிறார்கள்.

—நாதன்

"புதிய சுண்டிக்குளிச் சந்திக்கருகாமையில்"
ஏ. எவ். ரேமண்ட்ஸ்,
147, மெயின்வீதி,
யாழ்ப்பாணம்.
குறைந்த செலவில்
மனம்நிறைந்த
அந்தியசேவை
ரூபா 175/-
உயர்தர பிரேதப்பெட்டிகள்
ரூபா 50/-

## தம்பிக்காக....

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

டுக்கை வைச்சுக் கொண்டு நான் வயதுவந்த காலத்திலை என்ன செய்யுறது? அம்மான் துள்ளிக்குதித்தார்.

தலையை நிமிந்தினேன் ... சரசு விறுந்தைத் தூணோடை நிண்டு என்னை ஏக்கத்துடன் பார்க்கிறாள் ... அந்தப் பார்வை என் மனச்சாட்சியை ஏதோ செய்தது.

சரசுவை அரைகுறையாகப் பாத்தபடி அம்மானிடம் சொன்னேன்: "இப்ப ஏன் அம்மான் சத்தம் போடுறியள் ... அயலட்டையுக்கை இருக்கிறதுகள் என்ன சொல்லுங்கள்? எத்தினை வரியமாய் ஒண்டுக்கை ஒண்டு எண்டு ஒரு சோலி சுரட்டில்லாமல் இருந்துபோட்டு இப்ப இந்த மாதிரிச் செய்யிறது எனக்கு ஒரு மாதிரிக் கிடக்கு."

"எனக்கு புத்தி சொல்லிறியேடா ... மடையா ... இந்தக் குமரை வைச்சுக்கொண்டு நான் என்னடா செய்யுறது?" அம்மான் வேலியை பிக்கப் பார்க்கிறார்.

நான் நிதானமாய் சொல்லுறேன். "ஏன் அம்மான் நான் செத்தே போட்டன்?... இஞ்சை மலைமாதிரி இருக்கிறன்; நான் இருக்கையுக்கை உங்களுக்கு ஏன் கவலை?" என்றேன்.

அம்மான் என்னைக் கண்ணீருடன் பார்க்கிறார். சரசு நாணத்துடன் தூணில் மறைகிறாள். தம்பி என்னை நன்றியுடன் பார்க்கிறான். என்ன செய்வது? தமபிக்காக ......

## தாயே பாரம்மா — உந்தன் சேயாய் ஏரம்மா

(பி. மரியதாஸ், இல்லறத்தொண்டன்)

மாபரன் மாதாவாய் மகிமைதுலங்கிட மண்ணகம்மீது வந்தே
தாபரித்தேயுந்தன் தன்னலந்தனை நோக்காதேதெனைக் காப்பதம்மா.
ஊதாரிப் பிள்ளையாயுலகினிலுழன்ற என் உள்ளமதி லொளிர்ந்தே
ஆதரவாயெனை யரவணைத்தாள்ந்திடுமமலியே போற்றினேனே.

இருளடருலகிற்கு ஒளிக்கதிரெறிந்திடு மொப்பற்ற வுற்பவமே
அருட்திரு மைந்தனையண்டியே யெந்தனுக் காதரவளியுமம்மா
கடைகெட்ட பாவியான், உம் கண்ணெதிர்ப்படக் கூசிக்
கவலையடைகின்றேனே
உடைபட்ட வுள்ளத்தை யுத்தமியேயுந்த னுள்ளத்தோடிணையுமம்மா

யூதர் தம்வம்மிசம் யுகமெங்கும் புகழுறக் காரண கன்னிகையே
மாதவன் சூசையை மகிமையுடன் தானே மறைவழி நடத்தியுமே
பூதலக்கன்னியர் புகழுடையோர் பெறுப் பேரருள் பெற்றதுடன்
மாபழியேற்றிட்ட மன்னர்தம்தாயானீர் மகிழ்ந்துதான்போற்றுதுமோ

மண்ணகமாந்தரும் தண்மதியடைந்துதம் தப்பறை கூவுமின்று
முன்னமே மிதித்திட்ட முதல்மரி நீர்தாமே முழங்குவோமுன்புகழே
பன்னிரு தாரகை பளிரெனுமுடி சூடிப் பகலவனுடுத்திட்ட நீர்
இன்னமுமுணர்ந்திடா இத்தரை மாந்தர்க்கு இயம்புவாயித்தையம்மா.

சிலுவையடியினிற் சிறியவனருளப்பர் சிறந்தொரு தாயுமானீர்
பலுகிய பாரினிற் பாவியரையெலாம் பரிவுடன் சேயாய்க் கொண்டீர்
உலகமுள்ளவரை யுற்பவித்திடுமாந்தர் ஒவ்வொருவருக்குமம்மா
உயர்வடைந்திரே நீரும் உத்தம தாயாராயுயரிய பரம்பொருளால்.

அரவினைமிதித்திட்ட அன்புள்ள தாயாரே யண்டினேனுன்சரணம்
குலவிடுமுலகினில் நலம்பலநாடிநான் நாசமடைந்திடாமல்
[illegible] ளன்புள்ள ஆட்சியிலே
[illegible] வைத்து நீர் நிமலகடவுள்நின் மைந்தனுக்களியும மம்மா.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயம் அர்ச். சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், இவர்களின் ஆசியினூலும், புனிதர் லோறஞ்சியார், அன்னம்மாள், ஆசீர்வாதப்பர், லூசியா, யோண்பொஸ்கோ, 12-ம் பத்திநாதர் 23-ம் அருளப்பர் சுவாமி, அக்னெலோ இவர்களின் மன்றாட்டினூலும் எனக்கு பூரணசுகம் கிடைத்ததை நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

பக்தன், பேசாலை.

109|69.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### புரட்டாசி—1969

| | | | |
|---|---|---|---|
| 21 | ஞாயிறு | பரி. ஆவி. விழா. பின் 17-ம் ஞாயிறு | [ப] |
| 22 | திங்கள் | புனித வில்லனோவா தோமையார் | [வெ] |
| 23 | செவ்வாய் | புனித லீனஸ் | [சி] |
| 24 | புதன் | நோன்புப் புதன் | [ஊ] |
| 25 | வியாழன் | கிழமைப்பூசை | [ப] |
| 26 | வெள்ளி | நோன்பு வெள்ளி | [ஊ] |
| 27 | சனி | நோன்புச் சனி | [ஊ] |

## காவலன் கருத்து

# பாவம் ஏகாந்தமானதா ?

பாவம் ஏகாந்தமானதா? ஒரு பாவத்தைக் கட்டிக்கொள்வோனையும் இறைவனையும் தவிர வேறொருவரும் அதில் சம்பந்தப்படவில்லையா? அவ்விதம் கருதுபவர்கள் "ஒரு மனிதன் வழியாகவே பாவமும் மரணமும் உலகிற்குள் பிரவேசித்தன" என்னும் புனித சின்னப்பரின் வார்த்தைகளைச் சிந்தித்துப் பார்த்தல் நன்று.

ஆதாம் பாவத்தைக் கட்டிக்கொண்டான். அதன் தோஷத்தை நாம் அனுபவிக்கிறோம். ஆதாம் கடன் பட்டான். நாம் அதைத் தீர்க்க வேண்டியிருக்கிறது. ஆதாமின் பாவம் மட்டுமல்ல, ஒவ்வொரு மனிதர் செய்யும் பாவங்களும் அதைவிடக் குறைந்த அளவிலேனும் மற்றவர்களைப் பாதிக்காமல் இரா. நேரடியாகப் பிறருக்கு எதிராகச் செய்யப்படும் பாவங்கள் மாத்திரமல்ல, ஒருவனது மிக மிக அந்தரங்கமான எண்ணங்கள் தன்னும் இத்தன்மையனவே.

ஏனெனில், திருச்சபை ஓர் உடலாக இருக்கிறது. அது கிறிஸ்துவின் மறையுடல், ஓர் உடலின் எந்தப் பாகமெனினும் நோயுற்றிருந்தால் உடல் முழுவதும் அதனால் வருந்துகிறது. காலில் ஒரு பிளவையோ, சுவாசப்பையில் புற்று நோயோ கண்டிருக்கும் ஒருவனைச் சுகதேகி என்று சொல்ல முடியாது. அது போலவே கிறிஸ்துநாதரின் மறையுடலில் ஓர் உறுப்பு சேதப்பட்டாலும் அது முழு உடலையும் தாக்கி, பலவீனப்படுத்தி விடுகிறது. ஆகவே, பாவியானவன் தனக்குமட்டும் கேட்டைத் தேடிக் கொள்ளவில்லை. திருச்சபையின் உறுப்புக்களெல்லாம் ஒன்றுடன் ஒன்று நெருங்கி இணைந்து ஒன்றன் நன்மைக்காக மற்றது உழைத்துவர வேண்டியிருப்பதால், ஓர் உறுப்பு துன்பப்படும் போது எல்லா உறுப்புக்களும் துன்பப்படுகின்றன.

பாவசங்கிர்த்தனத்தில் எமது பாவங்களைத் தனிமையில் அறிக்கையிட்டு இறைவனின் மன்னிப்பைப் பெற்றுக் கொண்டாலும், பாவமும் மன்னிப்பும் எமது சொந்தவிஷயம் என எண்ணுதல் ஆகாது. ஒவ்வொரு பாவமும் அது எவ்வளவு அந்தரங்கமானதாக இருப்பினும் அது சமூகத்துக்கு எதிரானதுதான்.

தனிப்பட்டவனென ஒரு கிறிஸ்தவனைப்பற்றி நாம் பேசமுடியாதது போலவே தனிப்பட்டதென ஒரு பாவத்தைப் பற்றியும் பேசமுடியாது. ஒரு கிறிஸ்தவனானவன் மறையுடலில் வாழ்பவனாவான். ஒரு பாவியானவன் மறையுடலில் மரித்தவனாவான்.

பாவசங்கிர்த்தனத்தில் குருவானவர் தனிப்பட்ட முறையில் பாவமன்னிப்பு அளிப்பதில்லை. திருச்சபையின் பிரதிநிதியாகவே அங்கு அவர் இருக்கிறார். அவரது மன்னிப்பு பாவியை இறைவனுடன் மட்டுமல்ல மறையுடலுடனும் திரும்பவும் சமாதானம் செய்து வைக்கிறது. மறையுடலில் அவனை ஏற்றுக் கொண்ட பின்புதான் இறைவனின் மன்னிப்பை திருச்சபை அவனுக்கு அளிக்க முடியும்.

ஆகவே, ஒவ்வொரு சிறிய பாவமும் பிறருக்கு ஆத்தும, சரீர தீங்கை விளைவித்துத் துன்மாதிரியாய் இருப்பதுடன் முழுத் திருச்சபையின் நலனுக்கும் ஊறு விளைப்பதாயிருக்கின்றது என்பதை நாம் காணலாம்.

---

அணுக்குண்டுகளுக்கு முன்பு ஒருவேளை மனிதன் அசையாமல் நிற்கவும்கூடும். ஆனல் அன்புகனிந்த சொற்களின்முன் அவன் பின்னடையத்தான் வேண்டியிருக்கும்.

— காண்டேகர்

## இளம் பெண்க....

து நிற்கவேண்டிய நேரங்களில் நிற்க ஆர்வம் காட்டவேண்டும். இதனால நாம்கிறீஸ்துவ ஒற்றுமையை வெளிப்படையாய்க் காட்டுவோராவோம்.

"சோம்பேறியுடைய மனது பிசாசினுடைய வாசஸ்தலம்." ஆதலால் பெண்ணானவள் செபமும் வேலையும்என்ற இரண்டு கருவிகளைப் பாவித்துத் துர்ச்சனப் பசாசுக்குத் தன் இதயத்தில் இடம்கொடுக்கப் படாது. எந்தப் பெண்ணாவது நல்ல ஒரு பெண்மணியாக விளங்க விரும்புவாளேயன்றிக் கெட்டுப்போக விரும்பமாட்டாள் அறியாமையினாலே இதுவரை கெட்ட புத்தகங்களை, பத்திரிகைகளைப் படிப்பதில் அக்கறை கொண்ட பெண்ணானவள் இன்றுதொட்டு நல்லவிஷயங்களை அறிய நல்லபத்திரிகைகள் புத்தகங்களைத்தேடி வாசிக்க வேண்டும். சிநேகிதிகளைத் தேடிக் கதைகதையாக அளந்து கொட்டும் பெண்கள் நாவை அடக்கவேண்டும். எப்போதும் முன்மாதிரிகையானதும் நன்மை செய்யக் கூடியதுமான வார்த்தைகளையே பேசவேண்டும். "ஒருமுறைபேச இருமுறை யோசி" என்றபடி நிதானித்துப் பேச்சை மட்டுப்படுத்த வேண்டும். "வாயினாலே பாவஞ்செய்யாதவன் பாக்கியவான்" என்று புனித யாகப்பர் சொல்லுகிறார். அதிகம் கதைகதைத்தால் ஆவலாதி, அவதூறான வார்த்தைகளும் வருவதற்கு இடமுண்டு,

ஆனல் கதைக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் கதைக்க வேண்டும். உதாரணமாக ஒருவர் திருச்சபையையும் குருமாரையும் தவறாகவிளங்கி அவர்களுக்கு விரோதமாகக் கதைக்கும்போது எமக்கென்ன என்று வாயைமூடி வைத்திருக்கப் படாது. அமைதியாக, அன்பாக விளக்கமாகப் பேசவேண்டியவற்றை எடுத்துப்பேசி இவைகள் எவ்வளவு தேவதுரோகமான வார்த்தைகள் என்பதைப் பேசியவர் உணரவைக்கப் பிரயாசப் படவேண்டும். "மனிதர் முன்பாக என்னை அறிக்கையிடுகிறவர்களை நானும் பரலோகபிதாவின் முன்பாக அறிக்கையிடுவேன்" என்று ஆண்டவர் சொன்ன வார்த்தைக்கு இப்படியான பெண்கள் பாத்திரவான்களாயிருப்பார்கள்,

"சுத்தம் பரிசுத்தத்திற்கு அடுத்தது." ஆகவே, பெண்ணானவள் தன்னையும வீட்டையும் சுற்றுப்புறங்களையும் புனிதமாக வைத்திருக்க வேண்டும். குடும்பத்திலுள்ள அனைவரோடும் அன்பாகப் பேசவேண்டும். வெடுசுடுவென்று பேசுவது பெண்மைக்கு அழகல்ல. இப்படியான பேச்சு நன்மைசெய்யாது. வீட்டில் அலுவல்களைப் புரிந்துகொண்டிருக்கும்போது சினிமாப் பாட்டுக்களைப் பாடி மனதைப் படமாளிகைப் பக்கம் இட்டுச் செல்லாது, கிறிஸ்தவ கீர்த்தனைகளைப்பாடி மனதைத் தேவனின்பக்கம் திருப்ப வேண்டும். வீட்டிலுள்ள சிறுவரும் அவ்விதம் பாடச்செய்ய வேண்டும். ஒருவேளை அந்தக் குடும்பத்திலுள்ள ஒரு குடிகாரப்பிதா தன் குழந்தைகளின் வாயிலிருந்துவரும் ஞான அர்த்தம் நிறைந்த இப்பாக்களைக் கேட்பதனால் மனம்மாறக் கூடும். தினமும் குடும்பசெபமாலைஓதிவருவதன்மூலம் வீட்டில் சந்தோஷம் சமாதானம் நிலவ வழிபிறக்கும்.

நிற்க, நாங்கள் படித்திருக்கின்றோம். திருச்சபையில்மறுமலர்ச்சி தோன்றும்காலத்தில் வாழ்ந்து வருகின்றோம். அதே நேரத்தில் நவநாகரீகங்கள் அதிகரித்துள்ள காலத்திலும் வாழ்கின்றோம். கேட்டின் பாதையில்நம்பார்வையை நாம் திருப்பினல் 21-ம் நூற்றாண்டிலே வாழப்போகும் எங்கள் சந்ததி படுநாசமாய்ப் போகும் என எண்ணவேண்டியது.

ஆனல் கிறீஸ்தவம் நன்று கற்று, கிறீஸ்தவசீவியம் சீவித்துவர இன்றைய ஒவ்வொரு இளம்பெண்ணும் அக்கறை எடுத்து வருவாளாயின், வருங்காலச் சந்ததி பாக்கியம்பெற்றதாக விளங்குமென்பதில் ஐயமில்லை. இவ்வாறு அப்போஸ்தல அலுவல் குருமாருக்குரியதெனக் கருதாது ஒவ்வொரு பெண்ணுக்கும் உரிய அலுவலென உணர்ந்து வந்தால் தேவ அழைத்தல்களும் உண்டாகும்.

### அன்பர் அரங்கேற்றியது

# பிள்ளைகட்குப் பெற்றோர் பால் கல்வி அளிக்கவேண்டும்

"பிள்ளைகளின் பல்வேறு பராயத்திலும் அவர்கட்குகந்த பால் சம்பந்தமான அறிவைத் தெளிவாகவும், துணிவாகவும் கொடுக்கப் பெற்றோர் கடமைப் பட்டிருக்கின்றனர். சென்ற காலத்தில் பால் சம்பந்தமான அறிவைப் பெற்றோர் பிள்ளைகட்குக் கொடுக்க மறுத்ததின் காரணமாக, பிள்ளைகள் அவ்வறிவைத் தகுதியற்றவட்டாரங்களிலிருந்து பெற்றது மிகவும் தீங்கை இழைத்து வந்திருக்கிறது. மேலும் திருமணத்தையும் திருமணச் செயல்களையும் பாவக்கிருத்தியங்களென்ற நெளிவான அபிப்பிராயங்களையும் தூண்டியுள்ளது." இவ்வாறு சென்ற 9-9-69இல் யாழ்ப்பாண டிமொன் போட் சாலையில் **அன்பர் அரங்கம்** தன் 7-வது அமர்வை நடாத்தியபோது யாழ்-நகரசபை அங்கத்தவரும், சமாதான நீதிவானுமான திருமதி அந்தோனியா சாமிநாதர் தமது பிரதம உரையில் கூறினர்.

சமாதான நீதியஸ்தராகப் புதிதாக நியமனம்பெற்ற பேச்சாளருக்கு வண. பிதா எஸ். ஜே. இம்மனுவல் அரங்கத்தின் சார்பாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

அன்பர் அரங்கத்தின் முதல் அமர்வில் பேருரை நிகழ்த்திய திரு. பி. சவிரிமுத்துவின் மறைவிற்கு துக்கம் தெரிவித்துத் திரு. எஸ். எவ் அல்போன்ஸ் சபையாரின் 2நிமிட மவுன அனுசரிப்பை வேண்டியது சபையால் ஆழ்ந்த துக்கத்துடன் அனுசரிக்கப் பட்டது.

மேற்படி கூட்டத்திற்குப் பல குருக்களும், பெற்றோரும், வாலிபப் பெண்களும் சமுகமளித்தனர்.

*   *   *

### அன்பர் அரங்கேற்றுவது என்ன ?

"அன்பர் அரங்கம்" வளர்ந்தோர் மத்தியில் சமய-சமூக விஷயங்களைப்பற்றித் தெளிவான அறிவையும், துணிவான அபிப்பிராயங்களையும் வளர்ப்பதில் ஈடுபட்டிருக்கின்றது. இற்றைவரைக்கும் நடந்த ஏழு மாதாந்த அமர்வுகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட விஷயங்களும், பிரதம பேச்சாளர்களும் பின்வருமாறு :

1. குடும்ப வாழ்க்கை —காலஞ் சென்ற திரு. பி. சவிரிமுத்து
2. கிறிஸ்தவனின் சமூகக் கடமைகள்—திரு. பி. ஜே. அமிர்தநாயகம்
3. கிறிஸ்தவமும், அரசியலும்—திரு. எஸ். எவ். அல்போன்ஸ்சஸ்
4. எனது சகோதரனுக்கு நானே காவலன? —திரு. ம. அந்தோனிப்பிள்ளை
5. பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர்—திருமதி மார்கிரேட் சவிரிமுத்து
6. பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம் —திரு. அ. சிப்பிறியன்
7. பெற்றோரும் பிள்ளைகளின் பால் கல்வியும் (Sex Education) —திருமதி அந்தோனியா சாமிநாதர்

இந்த மாதாந்த அமர்வுகளின் பிரதம உரையாளரின் பேச்சைத் தொடர்ந்து சபையினரின் சல்லாபம் நடைபெறுகின்றது. இவ்வமர்வுகளைப் பற்றி அறியவோ, பங்குபற்றவோ விரும்பியவர்கள் சுவாமி எஸ். ஜே. இம்மனுவலுடன் (மடுத்தீனர் குருமடம், த. பெட்டி, இல. 2, யாழ்ப்பாணம்.) தொடர்பு கொள்ளவும்.

## நினைவு கூருவோம்

### V. யோசவ் பொன்னையா

அமரத்துவமடைந்த

### 10 ஆம் வருட மரண ஞாபகம்

இவரது ஆன்மசாந்திக்காக 19-9-69 வெள்ளிக்கிழமை காலை தோலகட்டி ஆச்சிரமத்திலும், அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்திலும் துக்கப்பாடற் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

இதனைக் கண்ணுறுவோர் இவருக்காக வேண்டிக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பிரிவால் துயருறும்: மனைவி மக்கள், மருகர், பேரர்.

அச்சுவேலி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969 ஆம் ஆ பு ட்டாசிமீ 20ஆம் உ சனிக்கிழமை அச்சிட்டுப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org